1979 ஏப்ரல் 9]

சென்னை மாநகராட்சி கல்வித்துறையில் பணியாற்றும் சூப்பர் வைசர்கள் ஆசிரியர்கள் எத்தனை பேர் நண்பகல் (Midday Meals Centre) உணவு சமையல் கூடத்தில் பணியாற்றுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; நான்கு ஆசிரியர்கள்.

சிமெண்ட் தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்கள்

*வினா எண்—673

திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிமெண்ட் தொழிற்சாலைகளில் காண்டிராக்ட் தொழிலாளிகள் இருப்பதைக் கண்டறிந்து அதை மாற்றி அமைப்பது குறித்து பரிந்துரை செய்ய ஒரு குழுவை அரசு நியமித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அக்குழு சமர்ப்பித்துள்ள பரிந்துரைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) சிமெண்ட் தொழிற்சாலைகளில் ஒப்பந்தத் தொழிலாளிகளின் நிலை குறித்து ஓர் ஆய்வு நடத்த ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அக்குழுவின் பரிந்துரைகள் மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் ஆய்வில் இருக்கின்றன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தொழிற்சாலைகளில் சட்டத்தின்படி வேலைகள் நடக்கின்ற போது அந்த இடங்களிலே ஒப்பந்தத் தொழிலாளர்களைப் புகுத்துவது என்ற செயல்கள் இன்று பரவலாக நடந்து கொண்டிருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? இந்த விஷயத்தைக் கவனிப்பதற்கும் அந்த கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா ? ஆமெனில் அதிலிருந்து என்னென்ன பதில் அதாவது அவர்களிடமிருந்து என்ன ரிப்போர்ட் கிடைத்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாநில அளவில் ஒரு குழு அமைத்திருக்கிறோம். அந்தக் குழு சில தொழில்களைத் தேர்ந்தெடுத்து அவைகளுக்கான நிலைமைகளைப் பரிசீலிக்க துணைக்குழுவாக அமைந்துளது. அந்தக் குழு கொடுத்துள்ள பரிந்துறைகள் நான்கு பிரிவுகள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதித்தால் அதை நான் படிப்பதற்கு தயாராக இருக்கிறேன்.

இருந்தாலும் நிலைமையைச் சொல்லிவிடுகிறேன். அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் பேரில் மாநிலக்குழு கான்ட்ராக்டர்களை அழைத்து அதை எப்படி செயல்படுத்துவது என்பதை ஆலோசித்து அதன்பின்னர் அரசுக்கு அனுப்புவார்கள். அதற்குப் பிறகு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளையான்குடிக்குக் குடிநீர் வழங்கல்

*வினா எண்674— திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

முகவை மாவட்டம், இளையான்குடி குடிநீர் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தற்பொழுது இத்திட்ட மதிப்பீடு நடப்பு விலைப்பட்டியல்படி திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது,

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இளையானகுடி திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? இப்போது செயல்படுத்தப்பட்டு துவங்கப்பட்டதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இது ஒரு 'காம்ப்ரகென்சிவ் ஸ்கீம்'. இதில் இளையான்குடி பேரூராட்சி குடிநீர் தேவை மட்டும் அல்லாது டாக்டர் ஜாகீர் உசேன் கல்லூரி மற்றும் வழியோர கிராமங்களான அலிமதுரை, வானி, நாகர்குடி, உலகமணியேந்நல், அட்டுக்குடி, கிருஷ்ணபுரம். நெடுங்குளம், ரகுநாதமடை, அத்திக்கரை, லட்சுமிபுரம், அ மெய்யனேந்தல் இளையவலசை, கொங்கம்பட்டி, பெரும்பாலை, கல்லூரணி, சித்தூரணி, ஆகிய ஊர்களின் குடிநீர் தேவையையும் சேர்த்து கணக்கிடப்பட்டு அதன்படி குடிநீர் திட்டம் வடிவமைக்கப்பட்டது. ஆய்வு முடிந்து அதற்காக ரூ. 42.50 லட்சம் செலவாகும் என்றும் பராமரிப்புக்காக ரூ. 95,000 ஆகும் என்றும் பரிந்துரை வழங்கப்பட்டது. அந்த பரிந்துரை 1975-ல் கொடுக்கப்பட்டு இப்போது 1979ஆம் ஆண்டு ஆகிறது, 'எஸ்கலேஷன்' அதாவது விலை அதிகம் ஆகும். அதனால் விலைப்பட்டியல் திருத்தி அமைக்கப்பட்டு, அது தலைமை பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் அவர்களால் வரையறை செய்யப்பட்டபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.